# மூங்கில் தோப்பில் ஊடுபயிராக காளான்!



காளான் வளர்ப்பு என்றாலே.. வைக்கோலும், கொட்டகையும் கட்டாயம் இருக்கும். ஆனால், இவை இரண்டும் இல்லாமல் மூங்கில் சருகுகளைப் பயன்படுத்தி, மூங்கில் தோப்பில் உள்ள மூங்கில் சுழிகளில் படுகைகளைத் தொங்கவிட்டு காளானை உற்பத்தி செய்து அசத்தி வருகிறார்.. தஞ்சாவூர் மாவட்டம், உடையார் கோவில் பகுதியைச் சேர்ந்த பாலசுப்ரமணியன்.

கோட்டூர் காந்தவனம் எனும் கிராமத்தில் இருக்கும் இவருடைய தோப்பில் நுழைந்தால்.. மரங்களில் தூளியாகத் தொங்கிக் கொண்டிருக்கும் காளான் படுகைகள்தான் நம்மை வரவேற்கின்றன. அவற்றை வருடியபடியே பேசத் தொடங்கிய பாலசுப்ரமணியன், இந்த மூங்கில் எல்லாமே 'வல்கரீஸ் கிரீன்' ரகத்தைச் சேர்ந்தது. ஏக்கருக்கு 1,500 கன்றுகள் வீதம் 10 ஏக்கரில் முள்ளில்லா மூங்கில் நடவு செய்து ஏழு வருடமாகிறது. வழக்கமாக மூங்கிலை 15 அடிக்கு 15 அடி இடைவெளியில் நடுவாங்க. ஏக்கருக்கு 200 கன்றுகள் வரைக்கும் வரும். நான் அடர் நடவு முறையில் ஏக்கருக்கு 1,500 கன்றுகளை நடவு செய்திருக்கேன்.

**பாதை காட்டிய பல்கலைக்கழகம்!**

அடர்த்தியாக இருப்பதால் நடவு செய்த 2-ம் வருடத்திலேயே அதிகமான நிழலும், குளிர்ச்சியும் கிடைக்கிறது. ஒரு ஏக்கரிலிருந்து வருடத்திற்கு 30 டன் சருகு கிடைக்கிறது. பத்து ஏக்கரிலும் 300 டன் கிடைக்கும். ஒரு கட்டத்தில் இந்தச் சருகையும், குளிர்ச்சியானச் சூழலையும் வைத்து 'காளான் வளர்த்துப் பார்க்கலாம் என்ற எண்ணம் வந்தது. இது தொடர்பாக, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் காளான் வளர்ப்புத் துறை தலைவர் பேராசிரியர் பிரகாசம், தஞ்சாவூர் காட்டுத் தோட்டத்திலிருக்கும் மண் நீர் ஆராய்ச்சி நிலையத் தலைவர் சந்திரசேகர் இரண்டு

பேரிடமும் ஆலோசனை கேட்டேன். தைரியமாக செய்யலாம் என்று நம்பிக்கை கொடுத்ததோடு, இலவசமாவே காளான் விதையையும் கொடுத்து உற்சாகப்படுத்தினாங்க. உடனடியாக காளான் வளர்ப்பில் இறங்கிட்டேன்.

கடந்த ஏழு மாசமாக சிப்பிக்காளானை உற்பத்தி செய்து, விற்பனை பண்ணிக்கிட்டு இருக்கேன். காளான் வளர்ப்பதனால், மூங்கிலோட வளர்ச்சி எந்த வகையிலையும் பாதிக்காது. வழக்கம் போல் ஒவ்வொரு வருடமும் ஒரு குத்துக்கு நான்கு புதுமூங்கில் உருவாகிக்கிட்டேதான் இருக்கும்.

**இரட்டை வரிசை நடவு!**

முள் இல்லா மூங்கில் எல்லா வகையான  மண்ணிலும் சிறப்பாக வளரும். இரண்டு சால் உழவு ஒட்டிய நிலத்தில், வரிசைக்கு வரிசை 5 அடியும், செடிக்கு செடி 5 அடியும் இருப்பது போல் குழிகளை எடுக்க வேண்டும். இரண்டு வரிசை முடிந்தவுடன் 10 அடி இடைவெளி இருக்க வேண்டும். இப்படி இரட்டை வரிசை முறையில்  நெருக்கமாக நடவு செய்தால்தனர், காளான் வளர்ப்புக்குத் தேவையான நிழலும் குளிர்ச்சியும் கிடைக்கும். ஒரு ஏக்கர் முழுக்க இரட்டை வரிசை குழிகள் எடுத்தால்.. சுமார் 1,500 குழிகள் வரை எடுக்கலாம். ஒவ்வொரு குழியும் 2 அடி, நீளம், அகலம்  ஆழத்தில் இருக்க வேண்டும்.

குழிக்கு தலா 10 கிலோ மட்கிய தொழுவுரம் வீதம் போட்டு, மண்ணால் மூடி, 4 அங்குல ஆழத்தில் கன்றை நடவு செய்து தண்ணீர் விட வேண்டும். அதன் பிறகு, மூன்றாம் நாள் ஒரு தடவை தண்ணீர் விட வேண்டும். பிறகு, வாரம் இரண்டு முறையும், மூன்ற மாதத்திறக்குப் பிறகு, வாரம் ஒரு முறையும், ஆறு மாதங்களுக்கு பிறகு, 10 நாட்களுக்கு ஒரு  முறையும், ஓராண்டுக்கு பிறகு மாதம் ஒரு முறையும் தண்ணீர் தர வேண்டும்.

**ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம்!**

நடவிலிருந்து 3-ம் மாதம் தலா 10 கிலோ மட்கிய தொழுவுரத்தை ஒவ்வொரு மூங்கில் குத்தை சுற்றியும் தூவ வேண்டும். முதல் ஆண்டு மட்டும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், அதன் பிறகு ஆண்டுக்கு ஒரு முறையும் இதே அளவு மேலுரம் கொடுத்தால் போதும். நடவிலிருந்து மூன்றாண்டுகளுக்கு பிறகு, ஒவ்வொரு ஆண்டும் ஏக்கருக்கு குறைந்தபட்சம் 2 ஆயிரம்  5ங்கில் கழிகளை வெட்டி விற்பனை செய்யலாம். சந்தையில் ஒரு மூங்கிலுக்கு 40 ரூபாயிலிருந்து 80

ரூபாய் வரை விலை கிடைக்கிறது. வெட்டுக்கூலி, போக்குவரத்த உட்பட எல்லா செலவுகளும் போக, ஏக்கருக்கு குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

**தண்ணீர் செட்டக்கூடாது!**

காளான் வளர்ப்புக்கு முக்கிய ஊடகமாக இருப்பது வைக்கோல். இதற்கு பதிலாகத்தான் மூங்கில் சருகுகள் பயன்படுகின்றன. இந்தச் சருகுகளை நான்கு மணிநேரம் தண்ணீரில் ஊற வைத்து, பிறகு ஒரு மணி நேரம் வேக வைக்க வேண்டும். அதன் பிறகு, நிழலில் சருகுகளை பரப்பி, அரை மணிநேரம் உலர்த்த வேண்டும். சருகில் லேசான ஈரம் இருக்கலாம். ஆனால்,கையில் அள்ளி பிழிந்து பார்த்தால், தண்ணீர் சொட்டக் கூடாது. தண்ணீர் சொட்டினால், மீண்டும் சிறிது நேரம் உலர்த்த வேண்டும். அரை கிலோ சருகை ஊற வைத்து வேக வைத்து உலர்த்தினால், இரண்டரை கிலோவாக எடை கூடியிருக்கும். இந்த சருகுகளை காளான் படுகைகள் தயாரிக்கும்போது பயன்படுத்த வேண்டும்.

**படுகை தயாரிப்பு!**

இரண்டு அடி உயரமும், ஒரு அடி அகலமும் உள்ள பாலித்தீன் பையின் ஒரு முனையை பிளாஸ்டிக் ஒயரால் கட்டி, அதன் உள்ளே நான்கு அங்குலம் (10 செ.மீ) உயரத்திற்க்க விதையைப் பரவலாகத் தூவ வேண்டும். மீண்டும் நான்கு  அங்குல உயரத்திற்க்கு சருகை நிரப்பி, 30 கிராம் விதையைத் தூவி, மீண்டும் சருகை நிரப்ப வேண்டும். இதுபோல் ஒரு பையில் மூன்று அடுக்குகளாக காளான் விதையும், நான்கு அடுக்குகளாக சருகும் இருக்கமாறு அமைத்து, பையின் தலைப்பகுதியை இறுக்கமாகக் கூட்டினால்.. காளான் படுகை தயாராகிவிடும்.

**நான்குபுறமும் சணல் சாக்கு!**

மூங்கில் தோப்பில் அதிக நிழலும் குளிர்ச்சியும் நிறைந்த பகுதியை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த இடத்திலிருக்கும் மூங்கில் மரங்களோடு சேர்த்து சுமார் ஒரு சென்ட் நிலத்தை சாக்குகளை தரையில் படாதவாறு  கட்டி தடுப்ப ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தரையிலிருந்து அரை அடி உயரத்திற்க்கு மேல் ஆரம்பித்து, நான்கடி உயரம் வரை வரும் வகையில் கட்ட வேண்டும். நடுவில் இருக்கும் மூங்கில் மரங்களில் காளான் படுகைகளைக் கட்டித் தொங்கவிட வேண்டும். ஒன்றின் கீழ் ஒன்றாக இரண்டு மூன்று பைகளை தொங்கவிடலாம். இரண்டு மூங்கில் மரத்திற்க்கு இடையே ஒரு குச்சியைக் கட்டி, அதிலும் பைகளை தொங்கவிடலாம்.

**16-ம் நாள் அறுவடை!**

காளான் வளர்ச்சிக்குத் தேவையான குளிர்ச்சியானச் சூழலை ஏற்படுத்துவதற்காக சாதாரணப் பருவத்தில் தினமும் இருவேளையும், கோடைக் காலத்தில் மூன்று வேளையும் சாக்குகளின் மீது தண்ணீர் தெளிக்க வேண்டும் (மழைக்காலத்தில் காளான் வளர்ப்பை நிறுத்தி வைக்க வேண்டும்). படுகையைத் தொங்கவிட்டதிலிருந்து, 3-ம் நாள் காளான் வளரத் தொடங்கும். 10-ம் நாள் படுகை முழுவதும் வெள்ளை நிறத்தில் பூஞ்சை படர்ந்திருக்கும். 13-ம் நாள், பாலித்தீன் பையில் துளையிட்டுக் கொண்டு மொட்டு வெளியில் வர தொடங்கும். 16-ம் நாள் அறுவடை செய்யலாம். அதிலிருந்து வாரம் ஒரு முறை என மொத்தம் மூன்று முறை (16,23,30-ம் நாட்கள்) அறுவடை செய்யலாம். 30-ம் நாள் படுகையின் ஆயுள் முடிந்துவிடும். மூன்று அறுவடைக்கும் சேர்த்து ஒரு படுகையில் இருந்து மொத்தம் 350 முதல் 500 கிராம் காளான் கிடைக்கம். சராசரியாக 400 கிராம் கிடைக்கும்.

**மாதம் 750 படுகைகள்!**

மூன்று அறுவடைக்குப் பிறகு, படுகையில் உள்ள சருகுகளை தோட்டத்திற்குள்ளேயே கொட்டிவிட்டு, பாலித்தீன் பையை அப்புறப்படுத்திவிட வேண்டும். ஏற்கெனவே தொங்கவிடப்பட்டிருந்த மரத்தில் அதே எண்ணிக்கையில் புதிய படுகைகளைத் தொங்கவிட வேண்டும். ஆரம்பத்தில் ஒரேயடியாக படுகைகளை தயாரித்துக் கட்டாமல் தினமும் 25 படுகைகளைத் தயாரித்துத் தொங்கவிட்டால், ஒருமாதத்தில் 750 படுகைகள் தயாராகிவிடும். இதில் இருந்து தினமும் சுழற்சி முறையில் அறுவடை செய்யலாம்.

இப்படி ஒரு சென்ட் இடத்தில் தொடங்கி, தோட்டம் முழுவதுமே காளான் வளர்ப்பை மேற்கொள்ளலாம். ஆனால், ஆட்கள் மற்றும் விற்பனை வாய்ப்பை நன்கு உறுதிப்படுத்திக் கொண்டு, அதன் பிறகு அதிக அளவில் உற்பத்தி செய்வது நல்லது.

ஒரு படுகையிலிருந்து சராசரியாக 400 கிராம் கிடைக்கும் என்றால் 750 படுக்கைகள் மூலமாக 300 கிலோ காளான் கிடைக்கும். ஒரு கிலோ 100 ரூபாய் என்று வைத்துக் கொண்டால் மாதத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். எல்லாச் செலவுகளும் போக, 15 ஆயிரம் ரூபாய் லாபமாக கிடைக்கும். மழைக் காலத்தில் மூங்கில் தோட்டத்தில் அதிகமான ஈரம் இருக்கும். அதனால் தோட்டத்திற்குள்ளேயே கால் வைக்க முடியாது. அந்தப் பருவத்தில் மட்டும் காளான் வளர்ப்புக்கு ஓய்வு கொடுத்திடலாம்.

காளானை பெரும்பாலானவங்க இப்ப பயன்படுத்த ஆரம்பிச்சுட்டதால், தேவை அதிகமாவே இருக்கு. அதனால் விற்பனையில் வில்லங்கம் எதுவும் இல்லை. உள்ளூர் சூப்பர் மார்க்கெட், டிபார்ட்மெண்டல் ஸ்டோர், பேக்கரிகளிலேயே மொத்தமாக வங்கிப்பாங்க.

**தொடர்புக்கு**

பாலசுப்ரமணியன், அலைபேசி : 94864-08384

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 10.05.11 www.vikatan.com